# சித்தர் பாடல்களில் வாழ்வியல்

15

முனைவர். த. மோகனாம்பாள்,
உதவிப் பேராசிரியர், டாக்டர். என்.ஜி.பி. கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
காளப்பட்டி சாலை, கோயம்புத்தூர் - 641048.
மின்னஞ்சல்: mohanambalsuja@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்:**

சித்தர்கள் என்றால் சித்தி பெற்றவர்கள் என்றும் நிலையான பேரறிவு படைத்தவர்கள் என்றும் பொருள். ‘சித்’ என்றால் அறிவு. அறிவைப் பயன்படுத்தி இறைவனைக் காண முயல்பவன் ‘பக்தன்’ எனவும் கண்டு தெளிந்தவன் ‘சித்தன்’ எனவும் அறியப்படுகிறான். தன்னிச்சையாகத் திரியும் மனதினை அடக்கி அதனை இறைவனிடம் செலுத்துபவர்கள் சித்தர்கள். சிவ இன்பமாகிய முக்தி நிலையை ‘சித்த நிலை’ என்றும், மெய் ஞானத்தை மறை பொருளாகக் கொண்டு அதன் உண்மைத் தன்மையை கண்டறிந்து அதனை வெளிப்படுத்தும் நோக்கத்தைக் கொண்டதே ‘சித்த நிலை’ என்றும் கூறப்படுகின்றது. மருத்துவம், சோதிடம், யோகம், மந்திரம், இரசவாதம் போன்றவற்றைத் தந்தவர்கள் சித்தர்களே. பிரபஞ்ச இரகசியம், உயிர் தத்துவம், இறை ஆற்றல், இவ்வுலக இயக்கம் இவற்றை ஆராய்ந்து அறிந்து இயற்கையோடு இயற்கையாக வாழ்ந்து மக்களைக் காத்துக் கொண்டிருப்பவர்கள். சித்தர்கள்.

வள்ளலார் சித்த நிலையை அருள்சேர் அனுபவமாக, “சித்தி என்பது நிலை சேர்ந்த அனுபவம்; அத்திறல் என்ற என் அருட்பெருஞ்சோதி” என்று கூறியுள்ளார். இப்பாடலில், உடலில் உள்ள உயிரானது உடலை விட்டுப் பிரிந்தால் தனித்து இயங்காது. அப்படிப்பட்ட உயிரானது உடலை விட்டுப் பிரிந்த பின் இம்மண்ணில் மறைந்திருந்து முன்பு செய்த வினைகளுக்கேற்பப் பிறவி எடுக்கும். எனவே இப்பிறவியிலேயே தன்னை அறிந்து, இறைவனையும் அறிந்து அவனுடன் இரண்டறக் கலக்கும் நிலையைச் ‘சித்த நிலை’ என்றும் இந்தச் சித்த நிலையையே அருள் சேர் அனுபவமாகவும் குறிப்பிடுகிறார்.

**திறவுச் சொற்கள்:** தேஜோ மயானந்தம், குண்டலினி, **உலோபம், மாச்சரியம்,** இணைவிழைச்சு, பரமுத்தி, ஞேயா

**முன்னுரை:**

பக்தி நெறியும், குருவழிபாடும் அருகிவிடாதபடி இருக்க வேண்டும் என்பதற்காகவே, பூமியில் அந்தந்தக் காலகட்டங்களில் சித்தர்களும், ஞானிகளும், மகான்களும் தோன்றி வருகின்றனர். இவர்கள், மீண்டும் மீண்டும் பிறந்து பிறவித் துன்பத்தில் ஆழ்ந்து உழன்று கொண்டிருக்கும் உயிர்களைக் காத்து ஆன்மீக வழியில் வழி நடத்திச் செல்கின்றனர். மண்ணில் தோன்றிய இவ்வுயிர்கள் முக்தியடையவே ஆன்மீகம் என்றொரு பாதையை வகுத்துக் கொடுத்துள்ளனர். இந்தச் சித்தர்களும், மகான்களும், ஞானிகளும் இறைவனின் திருவடியை அடையவும், மக்களின் வினைகளைக் களையவும் மனிதர்களுடன் மனிதர்களாகவே வாழ்ந்து, வாழ்க்கையை எப்படி வாழ வேண்டும் என்ற முறையையும் உணர்த்திச் சென்றுள்ளார்கள். தவமும், தியானமும் மக்களைச் செம்மைப்படுத்தவே உருவாக்கப்பட்டுள்ளது. சித்தர்கள் அவர்களது பூத உடலை இழந்தாலும் இவ்வுலக உயிர்களுக்கு ஏதாவது ஒரு உருவில் வழிகாட்டிய வண்ணமே உள்ளார்கள். அதனால் அவர்கள் ‘என்றும் அழிவற்றவர்கள்’ என்று கூறப்படுகின்றனர். இவர்கள் நிலையில்லாத இந்த மானுடப்பிறவியின் வழி மனித அறிவை மேம்படுத்துகின்ற அறிவாற்றலைச் செயல்படுத்துகின்றனர். இறையருளின் குறியீடுகளை மானுட ஆன்மாக்கள் புரிந்து கொள்கிற வகையில் வழிகாட்டியபடி உள்ளனர். மக்களுடன் மக்களாக வாழ்ந்து கொண்டிருக்கும் சித்தர்களின் வாழ்வியல் நெறியை அறிந்து கொள்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**சித்தர்களின் யோகநெறி:**

பண்டைய தமிழ்நாட்டில் பல ஆயிரம் சித்தர்கள் நம்மிடையே வாழ்ந்து வந்துள்ளனர். இவர்கள் யோகக் கலையைப் பயின்று அதன் மூலம் சித்திகள் பல கைவரப் பெற்றவர்கள். சித்தத்தில் தெளிந்த நிலை பெற்றுச் சீவனையே சிவனாகக் கொண்டு தெளிந்தவர்களுக்குச் சிவபெருமான் அட்டமா சித்திகளை அருளியுள்ளார். இதன் மூலம் சித்தர்கள் பல்வேறு காரியங்களைச் செய்து முடித்துள்ளனர். சித்தர்கள் ஒரே மாதிரி இருப்பதில்லை. ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக உலகமெங்கும் வாழ்ந்திருக்கிறார்கள். இன்னமும் மனிதனுடைய ஊனக் கண்களுக்குத் தெரியாமல் வாழ்ந்தும் வருகின்றனர். இவர்கள் பல விஞ்ஞான உண்மைகளை அன்றே தம் பாடல்களின் மூலம் வெளிப்படுத்தியுள்ளனர். சாகா நெறியே சித்தர்களின் நெறி. தாயுமானவர் சித்துக்கள் எவை? எவை? என்பதனை,

“கந்துக மதக் கரியை வசமா நடத்தலாம்
கரடி வெம்புலி வாயையும் கட்டலாம்
ஒரு சிங்கம் முதுகின் மேல் கொள்ளலாம்
கட்செவி எடுத்தாட்டலாம்
வெந்தழலின் ரதம் வைத்தைந்து லோகத்தையும்

வேதித்து விற்றுண்ணலாம்

வேறொருவர் காணாமல் உலகத்துலாவலாம்

விண்ணவரை ஏவல் கொள்ளலாம்

சந்ததமும் இளமையோடிருக்கலாம்

மற்றொரு சரீரத்தினிலும் புகலாம்
ஜலம் மேல் நடக்கலாம் தணல் மேல் இருக்கலாம்

என்னிகரில் சித்தி பெறலாம்
சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற திறமறிது

சத்தாகி என் சித்தமிசை குடிகொண்ட

வறிவான தெய்வமே தேஜோ மயானந்தமே"

**(தாயுமானசுவாமிகள் பாடல்; பா. எண்: 8 ப. எண்: 157)**

என்று 'தேசோமயானந்தம்' என்னும் பகுதியில் 11 வகையான செயற்கரிய சித்துக்களைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். மதம் பிடித்த யானையை அடக்கலாம், சிங்கத்தின் மேலேறிக் கொள்ளலாம், நீரின் மேல் நடக்கலாம் என்றவர் மனதினை அடக்கிச் சும்மா இருத்தல் என்பது மிகவும் அரிதான செயல் என்று குறிப்பிட்டுள்ளார். மேலும் பரஞ்சோதி முனிவர், பாம்பாட்டி சித்தர், இராமலிங்க சுவாமிகள் ஆகியோரும் சித்துக்களைப் பற்றித் தம் பாடல்களில் குறிப்பிட்டுள்ளனர்.

பாம்பாட்டி சித்தர் தம் பாடல்களில், நாகங்களைக் கையில் எடுத்து ஆட்டுவது, இந்திரன் உலகை இங்கே காட்டுவது, பெரிய தூணைச் சிறு துரும்பாகக் காட்டுவது, சிறு துரும்பைப் பெரும் தூணாகக் காட்டுவது, ஆணைப் பெண்ணாகவும், பெண்ணை ஆணாகவும் ஆக்குவது, மலைகளைப் பந்தாடுவது, ஏழு கடல்களையும் குடித்து ஏப்பமிடுவது, மண்டலங்களைக் கையினால் மறைப்பது, வானத்தை வில்லாக வளைப்பது, அக்னியில் மூழ்கி எழுந்து வருவது, நீருள் முச்சடக்கி இருப்பது, வலிய புலியைத் தாக்குவது, செம்பொன் ஆக்கும் ரசவாதம், 64 கலைகளையும் அறிவது, பற்றில்லா மனதைப் பெற்றிருப்பது என்று சித்துக்கள் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். இவ்வகையான சித்துக்களைப் பக்தி மார்க்கத்தின் வழியாகவோ, யோக மார்க்கத்தின் வழியாவோ அடைந்திட முடியும் என்பதும் விளக்கப்பட்டுள்ளது.

**பூரண சித்தி:**

'உள்ளது நாற்பது' எனும் நூலில் உள்ள பாடல்களில் ரமண மகரிஷி அவர்கள் இதனை,

" சித்தமா யுள்பொருளைத் தேர்ந்திருத்தல் சித்திபிற
சித்தியெலாஞ் சொப்பனமார் சித்திகளே – நித்திரைவிட்
டோர்ந்தா லவைமெய்யோ வுண்மைநிலை நின்றுபொய்ம்மை
தீர்ந்தார் தியங்குவரோ தேர்".

**(உள்ளது நாற்பது; பா. எண்: 35; ப.எண்: 7)**

என்று அருளியுள்ளார். எங்கும் எப்பொழுதும் உண்மைப் பொருளாய் வியாபித்துள்ள ஆத்மாவை உணர்ந்து, அந்த உணர்வில் நிலை பெற்றிருத்தலே பூரணமான சித்தியாகும். யோகப் பாதையில் கிடைக்கக் கூடிய சித்திகள் எல்லாம் பொய்யாகும். என்றும் உண்மைப் பொருளை உள்ளத்தில் உணர்ந்து உய்வதே உண்மையான சித்தி என்பதும் உணர்த்தப்பட்டுள்ளது.

**பாம்பன் சுவாமிகள்:**

சித்தர்கள் யோக நெறியை முறைப்படுத்தி குண்டலினி மூலம் இறைவனை அடையலாம் என்று கூறியிருந்தாலும் பாம்பன் சுவாமிகள் யோக நெறியின் மூலம் இறைவனை அடைய இயலாது என்று கூறுகின்றார். தான் செய்த தவத்தின் பயனால் இறைவனிடம் அட்டமா சித்திகளைப் பெற்றவர்களுக்கு அகங்காரம் வளர்ந்து, காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாச்சர்யம் போன்றவை அடங்காமல் இருக்கும். அதன் காரணத்தால் இறைவனை அடைய இயலாது என்று கூறுகின்றார். சித்தர்கள் கூறுவது போல மூலாதாரத்தில இருந்து குண்டலினி சக்தி ஒவ்வொரு ஆதார மையத்திற்குச் செல்லும் போதும் அந்த ஆதார மையத்திற்குண்டான ஆற்றல் தோன்றுகின்றது என்பது சித்தர்களின் கருத்து. அவ்வாறு தோன்றினாலும் அடுத்தடுத்த ஆதார மையத்திற்குச் செல்லும்போது, முன்பு கண்ட ஆற்றல்கள் ஒன்றை மறைத்து ஒன்றைக் காட்டும். அப்படிக் காட்டுவதால் இந்த குண்டலினி சக்தி இறைவனோடு கலக்க உதவாது என்று கூறுகின்றார்.

இறைவனின் அருளால் பிராணசக்தியைப் பயன்படுத்தும் போது அது உடலில் பயணிக்கும் அங்குல அளவுகளையும், அச்சக்தி குறையும் போது ஏற்படும் பலன்களைப் பற்றியும் பாம்பன் சுவாமிகள் தமது 'ஆனந்தக்களிப்பு' எனும் பதிகத்தில் குறிப்பிட்டுள்ளார்கள். அவை,

- "உறங்கும் போது 75 அங்குலம்
- இணைவிழைச்சு 48 அங்குலம்

| | |
|---|---|
| • ஓட்டம் | 25 ¾ அங்குலம் |
| • நடை | 18 அங்குலம் |
| • உணவு, உரையாடல் | 13 ½ அங்குலம் |
| • அசைவற்றிருத்தல் | 9 அங்குலம் |
| • புலன் ஒடுக்கம் | 8 ¼ அங்குலம் |
| • சமாதி | 7 ½ அங்குலம் |
| • அருள்வாக்கு | 6 ¾ அங்குலம் |
| • முக்கால உணர்வு | 6 அங்குலம் |
| • ஞானக்கண் | 5 ¼ அங்குலம் |
| • வானத்தைப் பற்றுதல் | 4 ½ அங்குலம் |
| • பதினான்கு உலகம் சுற்றி வருதல் | 5 ¼ அங்குலம் |
| • அட்டமா சித்தி | 3 ¼ அங்குலம் |
| • நவநிதி செய்யும் ஆற்றல் | 2 ¼ அங்குலம் |
| • ஆன்மாவைக் காணல் | 1 ½ அங்கலம் |
| • ஈஸ்வர அம்சமாகி தன்நிழல் முன்னும் பின்னும் விழாதிருத்தல் | ¾ அங்குலம் |
| • பரமுத்தி | 0 அங்குலம்” |

**(ஸ்ரீமத் பா.சு.வா. வா; ப.எண் :125)**

என்பனவாகும். முக்கால் அங்குலம் எனும் அளவும் பயணிப்பது நின்று விட்டால் பரமுத்தி எனும் ஆனந்தப் பெருவாழ்வு கிடைக்கும் என்று பாம்பன் சுவாமிகள் கூறுகின்றார். இதனை,

“முக்காலி லீசுர வமிச - மாகி
முன்பினுந் தன்னிழல் காணாம னிகழும்
முக்காலு மற்ற விடத்தே - பர
முக்தி யெனும்பெரு வாழ்வாகு ஷேயா”

**(ஆ. ம. 6666.பா.தொ. ஆனந்தகளிப்பு; பா.எண்: 8; ப.எண்.350)**

என்று ’ஆனந்த களிப்பு’ எனும் பதிகத்தில் அருளியுள்ளார். பக்திமார்க்கத்தில் மனதை அடக்கி அதை முருகப்பெருமான் திருவடியில் பதித்தால் உயர்வான மனநிலை தோன்றும். இம்மனோ நிலையில் இருந்து விலகாமல் ஈசன் அருளும் அமிழ்தத் தேனைப் பருகி முக்திப் பேற்றை அடைய குகப்பரம்பொருளின் திருவடிக் கமலங்களைச் சரணடையுமாறு பாம்பன் சுவாமிகள் வழிகாட்டியுள்ளார்கள். இதனை,

"சீர்மலி யானந்த வீட்டின் - பத்தைச்
சேர்ந்த வண்ணாமலைப் பேரெந்தை யீசன்
கூர்வடி வேலுடை யைய - னென்னுட்
குடிகொண்ட வொருவன்ற னடியென்றும் வாழி"

**(ஆ.ம. 6666. பா.தொ. பா.எண்: 15 ப.எண்.351)**

என்று கூறுவதோடல்லாமல் யோக நெறியின் மூலம் இறையருளால் உண்டாகும் ஞானம் தோன்றாது, தன்னறிவானது இறையருளால் மட்டுமே அடங்கும் என்றும் விளக்குகின்றார்.

**தொகுப்புரை :**

பிறவி எனும் பெருங்கடலைக் கடந்து முக்தியெனும் பெரும் பேற்றைப் பெற வேண்டுமானால் மனிதர்கள் இப்பிறவியில் மனம், வாக்கு, செயல் என்ற மூன்று நிலைகளிலும் இறைவனை முன்னிறுத்தி, அவன் திருவடியில் தஞ்சம் புகுந்தாலன்றி முக்தி எனும் பேற்றைப் பெற முடியாது. எனவே மனதை ஒருமுகப்படுத்தித் தவ நெறிகளின்படி இறைவனை நினைந்திருக்க வேண்டும். அதற்குச் சித்தர்கள் அந்தந்த காலகட்டங்களில் வாழந்து வழிகாட்டியுள்ளனர். கர்ம வினைகளுக்கு ஏற்பப் பிறவி எடுக்கும் மனித உயிர்கள் இறைவனின் திருவடியை அடைய வேண்டுமெனில் அருளாளர்களின் வழிகாட்டுதல் அவசியமாகின்றது. அவர்களைப் பின்பற்றி நடந்தால் பிறப்பிறப்பில்லா நிலையை அடைய முடியும் என்பது உணர்த்தப்படுகின்றது.

**துணை நூற்பட்டியல்:**


1. **தாயுமானசுவாமிகள் பாடல்**

   ஆசிரியர் : திரு. தி. சம்பந்த முதலியார்

   வெளியீடு : சென்னை அமெரிக்கன் அச்சுக்கூடம் , பதிப்பு ஆண்டு : 1891

2. **உள்ளது நாற்பது (அனுபந்தத்துடன்)**

   ஆசிரியர் : ஸ்ரீ ரமணமகரிஷி அவர்கள்

   வெளியீடு : ஸ்ரீ ரமணீயவாணி புத்தகாலயம்

   நாகராஜா பிரிண்டிங் ஒர்க்ஸ் , திருவண்ணாமலை, பதிப்பு ஆண்டு : 1928

3. **ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகளின் வாழ்வும் வாக்கும்**

   ஆசிரியர் : பின்னத்தூர் வெ. சீனிவாசன்

   பதிப்பகம் : நர்மதா பதிப்பகம் வெளியீடு : 10, நானா தெரு, பாண்டி பஜார், தியாகராயா நகர், சென்னை – 600 017

   தொலைபேசி : 044-24334397 அலைபேசி: 98402 26661, 9840932566 மின்னஞ்சல் : sales@narmadhapadhipagam.com

4. **ஆறு மண்டலங்களாகிய 6666 பாடல்களின் தொகுப்பு**
வெளியீடு :ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் அறக்கட்டளை,
ஆசிரியர்: பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள்
பதிப்பு ஆண்டு : ஜூன் 2009
புதிய எண்.14, பழைய எண்: 260, 2 வது தளம்,
பீட்டர்ஸ் சாலை, இராயப் பேட்டை,
சென்னை – 600 014
அலைபேசி: 9440 75535
மின்னஞ்சல்: pambantrust@yahoo.com